## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 446/2025

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | இளங்கோ |
| Father's Name | : | பொன்னன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 09.03.2026.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கரூர் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்களது காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் உதவி ஆய்வாளர் கஸ்தூரி அவர்களுடன் பணிபுரிந்து வகையில் அவருடைய கையெழுத்து எழுத்து நடை நன்கு பரிட்சயம் என்பதால் வழக்கு கோப்பினை பார்வையிட்டு அவருக்காக கூடுதல்

சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 02.9.2021ம் தேதி உதவி ஆய்வாளரர் கஸ்தூரி நிலையப் பொறுப்பில் இருந்தபோது சுமதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று வந்து நிலையக் கு.எண்.1182/21, ச.பி.294(பி) இதச மற்றும் 4 கந்து வட்டி தடை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **சுமதி கொடுத்த புகார் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே சம்பவ இடம் சென்று, கார்த்தியும், முனுசாமி முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர், மாதிரி வரைடம் அ.சா.ஆ. 4,5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மையென தெரியவந்ததன்பேரில் எதிரிகளை தேடி வந்ததில் எதிரிகள் முன்பிணை பெற்றதால் கைது செய்யப்படவில்லை. இத்துடன் உதவி ஆய்வாளர் கஸ்தூரி தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில்)**

அ.சா.1 கொடுத்த தவறான புகாரைப் பெற்று எதிரிகள் மீது உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. பார்வை மகசர், வரைபடம், கைப்பற்றுதல் மகசர் போன்ற ஆவணங்களை சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்றாலும், சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்றப்பத்திரிக்கை உதவி ஆய்வாளர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**